

திருவொற்றியூர் மண்டலம் 12-வது வார்டுக்கு உட்பட்ட மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் இந்த கல்வியாண்டில் புதிதாக தொடங்கப்பட்ட எல் கே ஜி யுகேஜி வகுப்பு மழலையருக்கான சீருடைகளை பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் மாமன்ற கவுன்சிலரும் தலைமை கழக வழக்கறிஞருமான கவிகணேசன் வீராசாமி வழங்கினார்.

# சென்னை திரு.வி.க.நகர் மண்டலம், 76வது வார்டு செல்லப்பா முதலி தெருவில் ரூ.4.58 கோடி மதிப்பீட்டில் தொடக்கப்பள்ளியில் புதிய பள்ளிக்கட்டிடம் கட்டுவதற்கான பணி

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்

**சென்னை,ஜன.14**

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான. பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-76, ஓட்டேரி, செல்லப்பா முதலி தெருவில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில்,

சென்னை தொடக்கப் பள்ளியில் புதிய பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கான பணிகளை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார். இந்து சமயம் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், செல்லப்பா முதலி தெருவில், சென்னை தொடக்கப் பள்ளியின் புதிய பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கான பணிகளை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார். இந்த புதிய தொடக்கப்பள்ளி கட்டிடம் மாநகராட்சியின் மூலதன நிதியின் கீழ், ரூபாய் 4.58 கோடி மதிப்பீட்டில், 4,150 சதுர அடி பரப்பளவில் கட்டப்படவுள்ளது. இதில் தரை தளம், முதல் தளம், இரண்டாம் தளத்துடன் 15 வகுப்பறைகள், கணிப்பொறி ஆய்வகம், சமையலறை, சேமிப்பு கிடங்கு, கழிவறைகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளது. இப்பணிகளை குறித்த காலத்திற்குள் முடித்திட ஒப்பந்ததாரருக்கும், மாநகராட்சி அலுவலர்களுக்கும் உத்தரவிட்டார்.

**திருநங்கைகள்**

இதனைத் தொடர்ந்து, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்,



மேயர் அவர்கள் தலைமையில், திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-74, கிருஷ்ணதாஸ் சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திருநங்கைகள் மற்றும் 250 வாகன ஓட்டுநர்களுக்கு உட்பட 650 நபர்களுக்கு சமத்துவ பொங்கல் பரிசுத் தொகுப்பினை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் ஆர்.பிரியா, திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர்தாயகம் கவி, மத்திய வட்டார துணை ஆணையாளர்திரு.எச்.ஆர்.கௌஷிக், மாமன்ற உறுப்பினர் எஸ்.தமிழ்செல்வி மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் ரவுடி கொலை வழக்கில் 9 பேர் கைது

**சென்னை ஜன 14-**

சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் ரவுடி கொலை செய்யப்பட்ட வழக்கில் துப்பு கொடுத்த கள்ளக்காதலி உட்பட 9 பேரை தனிப்படை போலீசார் கைது செய்தனர். குற்றவாளிகளை பிடிக்க முயன்ற போது கால் தவறி கீழே விழுந்ததில் 2 பேருக்கு மாவுக்கட்டு போடப்பட்டுள்ளது. சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் பிரசவ வார்டில் ஆவடி ஏரிக்கரை தாழம்பூ தெருவை சேர்ந்த சுசித்ரா(21) கடந்த டிசம்பர் மாதம் அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு கடந்த மாதம் 18ம் தேதி குழந்தை பிறந்தது. சற்று பலவீனமாக குழந்தை இருந்ததால் தாய் சுசித்ரா மற்றும் குழந்தை மருத்துவமனை வளாகத்திலேயே தொடர் சிகிச்சையில் இருந்தனர். இதற்கிடையே 25 நாட்கள் தீவிர சிகிச்சைக்கு பிறகு சுசித்ராவின் குழந்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று இறந்தது. இதனால் சுசித்ராவின் முன்னாள் பள்ளி தோழனும், கள்ளக்காதலனான கொளத்தூர் மகாத்மா காந்தி நகர் 4வது தெருவை சேர்ந்த ஆதி(எ) ஆதிகேசவனுக்கு (20) சுசித்ரா குழந்தை இறப்பு குறித்து தகவல் அளித்தார்.

அதன்படி ஆதி கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு வந்து குழந்தை இறப்பு குறித்து டாக்டர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். பிறகு கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் தகராறில் ஈடுபட்ட ஆதி மற்றும் சுசித்ராவின் உறவினர்களை சமாதானம் செய்து வைத்தனர்.அதன் பிறகு சுசித்ரா மற்றும் அவருக்கு உதவியாக வில்லிவாக்கம் பொன்னாங்கிணறு தெருவை சேர்ந்த சாருமதி(23) இருந்தார். பிரச்னை முடிந்து சுசித்ரா, சாருமதி மற்றும் கள்ளக்காதலன் ஆதி ஆகிய மூன்று பேரும் மருத்துவமனை வளாகத்திலேயே மது அருந்திவிட்டு ஒன்றாக தூங்கியுள்ளனர். அப்போது நேற்று முன் தினம் அதிகாலை 6 பேர் கொண்ட கும்பல் ஒன்று மருத்துவனைக்குள் புகுந்து மது போதையில் இருந்த ஆதியை சரமாரியாக வெட்டி படுகொலை செய்தனர். இதுகுறித்து கீழ்ப்பாக்கம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர். அப்போது ரவுடி ஆதியை அவரது கள்ளக்காதலி சுசித்ரா இறந்த தனது குழந்தைக்கு நியாயம் கேட்க வரவழைத்ததும், பிறகு ஆதி மருத்துவமனைக்கு வந்த

தகவலை சுசித்ரா தனது தோழியான சாருமதி மூலம் ஆதியின் நண்பர்களுக்கு தகவல் அளித்ததும் தெரியவந்தது.மேலும் கொலை நடந்த பகுதியை சென்னை தெற்கு மண்டல கூடுதல் கமிஷனர் நரேந்திரன் நாயர் நேரில் சென்று ஆய்வு செய்து, குற்றவாளிகளை படிக்க 9 தனிப்படைகள் அமைத்து உத்தரவிட்டார்.

அதன்படி தனிப்படையினர் உயிரிழந்த ஆதியின் கள்ளக்காதலி சுசித்ரா மற்றும் சாருமதியிடம் கிடுக்கிப்பிடி விசாரணை நடத்திய போது, ராஜமங்கலம் காவல் எல்லையில் கடந்த 2022ம் ஆண்டு ரவுடி பழனி என்பவரை ஆதி தனது கூட்டாளிகளுடன் சேர்ந்து வெட்டி கொலை செய்துள்ளார்.அதற்கு பழிவாங்கும் நோக்கில் பழனியில் ஆதரவாளர்கள் ஆதியை கொலை செய்ய திட்டம் தீட்டி வந்தனர். பழனி கொலை வழக்கில் ஆதி 2 ஆண்டுகள் சிறையில் இருந்து கடந்த 2ம் தேதி வெளியே வந்துள்ளார். அவரை எப்படியும் கொலை செய்ய வேண்டும் என்று பழனியின் ஆதரவாளர்கள் ஆதியின் கள்ளக்காதலி மற்றும் சாருமதி, ஆதியின் நண்பர்கள் உதவியுடன் தகவல்கள் சேகரித்தனர். அப்போது தான் சுசித்ராவின் குழந்தை இறப்புக்கு மருத்துவமனைக்கு ஆதியை வரவழைத்தனர். டாக்டர்களிடம் நடந்த பிரச்சனை முடிந்து ஆதி அங்கிருந்து புறப்பட முயன்றார்.

ஆனால் சாருமதி மற்றும் கள்ளக்காதலியான சுசித்ரா ஆகியோர் ஆதிக்கு மதுபானம் கொடுத்து தங்களுடன் தங்க வைத்தனர். அதிக போதையில் ஆதி இருக்கும் தகவலை இருவரும் பழனி ஆதரவாளர்களுக்கு கொடுத்துள்ளனர்.அதன்படி பழனி ஆதரவாளர்கள் திட்டமிட்டு நேற்று முன் தினம் அதிகாலை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு வந்து மது போதையில் நிதானம் இல்லாமல் இருந்த ரவுடி ஆதியை வெட்டி கொன்று விட்டு தப்பி ஓடியது தெரியவந்தது. அதை தொடர்ந்து தனிப்படையினர் ஆதியின் கள்ளக்காதலி சுசித்ரா, சாருமதியை கைது செய்தனர்.

மேலும், ஆதியை கொலை செய்துவிட்டு தலைமறைவாக இருந்த முக்கிய குற்றவாளியான வனக்குமார் (21), கார்த்திக் ராஜா(20), ஸ்ரீராம்(22), ஜெயபிரதாப்(20), சூர்யா(19), அலிபாய்(21), அருண்குமார்(22) ஆகியோரை அதிரடியாக கைது செய்தனர்.தனிப்படை போலீசார் பிடிக்கும் போது வனக்குமார் மற்றம் கார்த்திக் ராஜா ஆகியோர் தப்பித்து ஓடினர். அப்போது இருவரும் கால் தடுக்கி விழுந்ததில் இருவருக்கும் எலும்பு முறிவு ஏற்பட்டது. அவர்களை தனிப்படையினர் மருத்துவமனையில் அனுமதித்து மாவுக்கட்டு போட்டனர். பின்னர் கொலையாளிகளிடம் இருந்து 4 பட்டாக்கத்திகள், பைக் பறிமுதல் செய்யப்பட்டது.

# வேளச்சேரி பகுதியில் செல்போன் காணாமல் போன தகராறில் நண்பருக்கு கத்தி குத்து: ஒருவர் கைது

**சென்னை ஜன 14-**

சென்னை, வேளச்சேரி, நேரு நகர் பகுதியில் வசித்து வரும் தர்மலிங்கம், என்பவர் பெருநகர சென்னை மாநகராட்சியில் துப்புறவு மேற்பார்வையாளராக வேலை செய்து வருகிறார். தர்மலிங்கமும், அதே பகுதியில் வசித்து வரும் சிறுவயது நண்பர் விஜய்காந்தி என்பவரும் ஒன்றாக சேர்ந்து மது அருந்துவது வழக்கம். கடந்த 11.ந் தேதி அன்று காலை, தர்மலிங்கமும், விஜய்காந்தியும் மது அருந்திக் கொண்டிருந்தபோது, விஜய்காந்தி அவரது செல்போனை தொலைத்துவிட்டு தர்மலிங்கம் தான் செல்போனை எடுத்து வைத்துள்ளார் என நினைத்து அவரிடம் தகராறு செய்துவிட்டு சென்றுள்ளார்.

இந்நிலையில் இரவு மணியளவில் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் காலனி பகுதியில் தர்மலிங்கம் அவரது நண்பருடன் சேர்ந்து நடந்து சென்ற போது, பின்னால் வந்த விஜய்காந்தி செல்போனை தரமாட்டியா என கூறி அவர் மறைத்து வைத்திருந்த கத்தியால் தர்மலிங்கத்தை தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பிசென்றார். இதில் இரத்தக்காயமடைந்த தர்மலிங்கம் இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று கொடுத்த புகாரின் பேரில் வேளச்சேரி காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர். வேளச்சேரி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி விஜய்காந்தி, என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து குற்றச் செயலுக்கு பயன்படுத்திய 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் விசாரணையில் எதிரி விஜய்காந்தி மீது ஏற்கனவே 2 குற்றவழக்குகள் உள்ளதும் தெரியவந்தது.கைது செய்யப்பட்ட எதிரி விஜய்காந்தி விசாரணைக்குப் பின்னர், நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# சூப்பில் தூக்க மாத்திரை கலந்து கொடுத்து நர்ஸிடம் சுமார் 6சவரன் திருட்டு: தோழி கைது

**சென்னை ஜன 14-**

சென்னை, ஆதம்பாக்கம் பகுதியில் வசித்து வரும் சுனதா, என்பவர் எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் நர்ஸ் ஆக பணிபுரிந்து வருகிறார். இவருடன் அதே மருத்துவமனையில் நான்சி நிஷா என்ற நர்ஸும் பணிபுரிந்து வருகிறார். இருவரும் நண்பர்களாக பழகி வந்தனர். இந்நிலையில் கடந்த வருடம் அக் 10.ந் தேதி அன்று சுனதா மருத்துவமனையில் பணியிலிருந்து போது குடும்ப சூழ்நிலையின் காரணமாக மனஉளைச்சலில் இருந்ததால் உடன் பணிபுரியும் நான்சி நிஷா வலுகட்டாயமாக சைதாப்பேட்டை பகுதியில் உள்ள அவரது வீட்டிற்கு அழைத்து சென்றுள்ளார். பின்னர் சிறிது நேரம் கழித்து நான்சி நிஷா வாங்கி கொடுத்த காளான் சூப்பை சாப்பிட்டதும் சுனதா மயக்க நிலைக்கு சென்று தூங்கி இரவு 7.00 மணிக்கு எழுந்துள்ளார். உடனே நான்சி நிஷா அவசரமாக வெளியே செல்ல வேண்டியுள்ளது என கூறி சுனதாவை இருசக்கர வாகனத்தில் அழைத்துக்கொண்டு சைதாப்பேட்டை இரயில் நிலையத்தில் இறக்கிவிட்டுள்ளார். சுனதா வீட்டிற்கு சென்று பார்த்ததும் கழுத்தில் அணிந்திருந்த சுமார் 6 சவரன் தங்கச்செயின் காணாமல் போனது தெரியவந்தது. இது குறித்து சுனதா சைதாப்பேட்டை காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.சைதாப்பேட்டை காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணையில் எதிரி நான்சி நிஷா சுனதாவிற்கு களாளான் சூப்பில் தூக்க மாத்திரை கலந்து கொடுத்து தங்கச்செயினை திருடியது தெரியவந்தது. அதன்பேரில் மேற்படி வழக்கில் தொடர்புடைய நான்சி நிஷா, என்பவரை கைது செய்தனர். மேலும் எதிரி நான்சி நிஷா திருடிய தங்கச்செயினை உருக்கி வியாசர்பாடி பகுதியில் உள்ள அடகு கடையில் வைத்திருப்பது தெரியவந்தது. அடகு கடையிலிருந்து சுமார் 48 கிராம் தங்ககட்டி மீட்கப்பட்டது.

மேலும் போலீசாரின் விசாரணையில் எதிரி நான்சி நிஷா இதே போன்று கடந்த நவ 15.ந் தேதி அன்று எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் பணிபுரியும் நர்ஸ் தங்கம்மாளுக்கு உடன் பணிபுரியும் நான்சி நிஷா திட்டமிட்டு ஜூஸில் தூக்க மாத்திரையை தங்கம்மாளுக்கு கலந்து கொடுத்து அவரை குடிக்க வைத்து மயக்கமானவுடன், அவரை வீட்டிற்கு பாதுகாப்பாக அழைத்துச் செல்வது போல நாடகமாடி ஆட்டோவில் மடியில் படுக்க வைத்து அழைத்து வரும் போது வழியிலேயே தங்கம்மாள் அணிந்திருந்த சுமார் 4 ¾ சவரன் தாலிச்செயினை திருடிய வழக்கில் சைதாப்பேட்டை போலீசாரல் கைது செய்யப்பட்டு கடந்த வாரத்தில் ஜாமீனில் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. விசாரணைக்குப்பின்னர் கைது செய்யப்பட்ட எதிரி நான்சி நிஷா நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

மழைநீர்
உயிர்நீர்

# ஆன்லைன் டிரேடிங்கில் முதலீடு செய்தால் அதிக லாபம் தருவதாக கூறி ரூ.88 லட்சம் பணத்தை பெற்று மோசடி வழக்கில் மேலும் இருவர் கைது

**சென்னை ஜன 14-**

சென்னை, விருகம்பாக்கம் பகுதியில் வசித்து வரும் ரோகித் கிம், என்பவர் தனியார் வங்கியில் சீனியர் மேனஜராக பணிபுரிந்து வருகிறார். இவரிடம் கடந்த வருடம் 2023ம் ஆண்டு பிப்ரவரி மாதம் அறிமுகமான ராஜசேகர் என்பவர் ஆன்லைன் டிரேடிங்கில் முதலீடு செய்தால் அதிக லாபம் பெற்று தருவதாக கூறிய நிலையில் தனக்கு விருப்பமில்லை என்று தெரிவித்த பின்பும், ரோகித்கிம்மிடம் ராஜசேகரும் அவரது தாயார் இந்திரா மற்றும் மனைவி பவித்ரா ஆகியோர் பணத்திற்கு நம்பிக்கை அளித்ததின்பேரில், ரோகித் கிம் கடந்த 2023ம் ஆண்டு பிப்ரவரி மாதம் ரூ.4,00,000 ஐ அவர்களின் வங்கி கணக்கிற்கு அனுப்பியதாகவும் பின்னர் சில நாட்கள் கழித்து அவர்கள் இலபாம் கிடைத்ததாக கூறி பணம் ரூ.5,07,000 ஐ திருப்பி கொடுத்துள்ளனர்.

மேலும் மேற்படி நபர்கள் நிறுவனம் இலாபத்தில் செல்வதால் இதைவிட அதிக பணம் செலுத்தினால் அதிக இலாபம் கிடைக்கும் என கூறி நிலையில் அதை நம்பிய ரோகித் கிம் கடந்த ஜீன் மாதம் பணம் ரூ.88 லட்சம் ராஜசேகரிடம் கொடுத்ததாகவும், ஆனால் ராஜசேகர் அவரது அம்மா இந்திரா மற்றும் பவித்ரா ஆகியோர் கூறியபடி லாபத்தை தராமலும், கொடுத்த பணத்தை திரும்ப தராமலும் ஏமாற்றி வந்த நிலையில் தலைமறைவானதால், மேற்படி நபர்களை கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்து தனது பணத்தை மீட்டு தருமாறு ரோகித்கிம், முத்தியால்பேட்டை காவல் நிலைய குற்றப் பிரிவில் புகார் கொடுத்ததின் பேரில், வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

முத்தியால்பேட்டை காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி வழக்கில் தொடர்புடைய ஆன்லைன் டிரேடிங் நடத்தி வரும் ராஜசேகர், மண்ணடி, சென்னை என்பவரை 18.04.2025 அன்று கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர். மேலும் இவ்வழக்கில் தலைமறைவாக இருந்த எதிரிகளை தனிப்படை போலீசார் தீவிர விசாரணை செய்து தேடுதல் வேட்டை நடத்தி தொடர்புடைய 1.பவித்ரா,2.இந்திரா, ஆகிய இருவரை கைது செய்தனர்.

# போகி பண்டிகையின் போது பழைய பொருட்களை எரிப்பதை தவிர்க்க வேண்டும்: கிரீன் நீடா சுற்றுச்சூழல் அமைப்பு வேண்டுகோள்

**சென்னை ,ஜன.14-**

புகை மனிதர்களுக்கு அதிக பாதிப்புகளை ஏற்படுத்துவதால் போகி பண்டிகையின் போது பழைய பொருட்களை எரிப்பதை தவிர்க்க வேண்டும் என கிரீன் நீடா சுற்றுச்சூழல் அமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் மு.ராஜவேலு தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அதை கூறியிருப்பதாவது,

போகி பண்டிகையின் போது பழைய துணிகள், டயர்கள், பிளாஸ்டிக் பொருட்களை எரிக்கும் போது வெளிப்படும் புகையால் ஏற்படும் பாதிப்புகளை நாம் குறைவாக எண்ணி விட முடியாது. அதிக அளவிலான நைட்ரஜன் டை ஆக்சைடினால் மார்புச்சளி, மூச்சுத் திணறல், பல் ஈறு வீக்கம், நுரையீரல் புற்று நோய், கண் எரிச்சல் உண்டாகின்றன.

கார்பன் மோனாக்சைடின் அளவு 300 பி.பி.எம். அளவைத் தாண்டும்போது தலைவலி, வாந்தி, ரத்தத்தில் உள்ள பிராணவாயு அளவு குறைதல் உள்ளிட்ட உபாதைகளை ஏற்படுத்துகின்றன. கார்பன் மோனாக்சைடின் அளவு 1,000 பி.பி.எம். தாண்டும்போது சில நேரங்களில் உயிரிழப்பு கூட நேரிடலாம்.

ஹைட்ரோ கார்பன் அதிக அளவு வெளியிடப்படுவதால் மூச்சுக்குழாய் அடைப்பு, இருமல், மூக்கு மற்றும் தொண்டை எரிச்சல், புற்று நோய் மற்றும் உடல்சோர்வுகள் வந்து சேருகின்றன. காரீயம் நம் உடலில் அதிக அளவில் சேரும்போது நினைவாற்றல் குறைகிறது. சிந்தனையில் மாற்றம், சிறுநீரகத்தில் பழுது, அமைதியின்மை மற்றும் நுரையீரல் பாதிப்பு ஆகியவை ஏற்படுகின்றன.

இது மனிதர்களுக்கு மட்டும் பாதிப்பு ஏற்படுத்துவதில்லை. இந்த நச்சுகள் காற்றில் அதிகமாக கலப்பதால் தாவர இலைகளின் வளர்ச்சி குன்றுகிறது. இலை சுருளுதல், காய்கள் முற்றாமலேயே பழுத்து விடுதல் போன்ற அபாயம் நேரிடுகின்றன. புகையிலிருந்து வெளியேறும் துகள்கள் மண்ணில் படிவதால், அந்த நிலங்கள், பயிர்கள் மற்றும் செடிகள் வளர்வதற்குத் தகுதியற்றுப் போகின்றன. மேலும், தாவர இலைகளின் மீது துகள்கள் படிவதால் உணவு உற்பத்தி அதிக அளவு குறைந்து போகிறது. இவ்வளவு பாதிப்புகளை ஏற்படுத்தும் நிலையிலும் ஒவ்வொரு ஆண்டும் போகி பண்டிகையின் போது பழைய பொருட்களை எரிப்பது ஆண்டுதோறும் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. புகையால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து பொதுமக்களுக்கு உள்ளாட்சி அமைப்புகள் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தி போகியின்போது பழைய பொருட்களை எரிப்பதை தடுத்து நிறுத்த வேண்டும்.

போகி பண்டிகையின் போது மரக்கன்றுகளை நட்டு சூழலை பசுமையான வகையில் மாற்றி அனைவரும் தூய்மையான காற்றினை சுவாசிக்க வேண்டும். இவ்வாறு கிரீன் நீடா சுற்றுச்சூழல் அமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் மு.ராஜவேலு தெரிவித்துள்ளார்.

# ஜெ.ஜெ. நகர் பகுதியில் போதைப்பொருள் வைத்திருந்தவர் கைது

**சென்னை ஜன 14-**

சென்னையில்போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், தனிப்படையினர் மற்றும் ஜெ.ஜெ. நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் ஒருங்கிணைந்து அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம், டி.வி.எஸ். அவென்யூவில் கண்காணித்து, அங்கு சந்தேகப்படும்படி நின்றிருந்த நபரை விசாரணை செய்து, சோதனை செய்தபோது, அவர் மெத்தம்பெட்டமைன் என்ற போதைப்பொருள் மறைத்து வைத்திருந்தது தெரியவநதது.

அதன்பேரில், ஜெ.ஜெ. நகர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, சட்டவிரோதமாக போதைப்பொருள் வைத்திருந்த எதிரி ஜெகதீஷ், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 4.5 கிராம் எடை கொண்ட மெத்தம்பெட்டமைன் மற்றும் 1 செல்போன் பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட எதிரி ஜெகதீஷ் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.




சென்னையில் நடந்த விழாவில் ஆயிரம் ஒப்பந்த செவிலியர்களுக்கு பணி நிரந்தர ஆணைகளை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார். இதில் அரசு கூடுதல் தலைமை செயலாளர் செந்தில்குமார், ஊரக நல பணிகள் இயகுநர் சித்ரா, நோய் தடுப்பு மருந்து துறை இயக்குனர் சோமசுந்தரம், ஆராய்ச்சி இயக்குனர் சுகந்தி ராஜகுமாரி, குடும்ப நல இயக்குனர் சத்யா கலந்து கொண்டனர்.

# கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் ரவுடி கொலை செய்யப்பட்ட விவகாரம்: 4 காவலர்கள் சஸ்பெண்ட்

**சென்னை ஜன 14-**

சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் ரவுடி ஆதி கொலை செய்யப்பட்ட விவகாரம் தொடர்பாக 4 காவலர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர். முதல் நிலை காவலர் நரேந்திரன், பெண் காவலர்கள் சரிதா, அம்பிகா, நீலாவதி ஆகியோர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர்.

பணியில் கவனக்குறைவாக இருந்ததை அடுத்து 4 காவலர்களை சஸ்பெண்ட் செய்து காவல் ஆணையர் அருண் நடவடிக்கை மேற்கொண்டார்.

